I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
<u>M.C.O.P.NO.391/2024</u>

| | | |
|---|---|---|
| Name | : | Vanitha |
| Husband Name | : | Yuvaraj |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.11.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 12.50 p.m**

**இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்**

<u>2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த விபத்தில் இறந்தவர் என் கணவர். அவருடைய வாரிசுகள் நான், 2 வது மனுதாரர் மகன், 3 வது மனுதாரர் என் மாமியார். என்னுடைய கணவரின் சகோதரர் திருமணமாகி தனியாக வசித்து வருகிறார். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து எப்படி நடந்தது என்று சொன்னார்களா என்றால் என் மச்சனரின் நண்பர் ராஜேஷ் என்பவர் ஆட்டோ ஓட்டுகிறார். அவர் சொல்லி தான் எனக்கு தெரியாது. அவர் என்ன சொன்னார் என்றால் பஸ் வந்து கார் மீது மோதியதால் விபத்து நடந்ததாக சொன்னார்கள்.09.04.2024 அன்று கரசமங்கலத்தில் BS net service அருகில் விபத்து நடந்தது.

இந்த விபத்தில் என் கணவர் கார் ஓட்டி கொண்டிருந்தார். அந்த கார் என் தங்கை ஆனந்தி என்பவருக்க சொந்தமானது. கார் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உண்டு. அதை தாக்கல் செய்துள்ளேன். அடிப்பட்டவரை நருவி மருத்துவமனையில் சேர்த்தோம். 5 நிமிடம் தான் உயிருடன் இருந்தார். அதன் பிறகு இறந்துவிட்டார். அதன் பிறகு பிரேத பரிசோதனை

அறிக்கை செய்ய அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அந்த பிரேத பரிசோதனை அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன். அந்த அறிக்கையில் என் கணவர் குடித்துவிட்டு வண்டி ஓட்டியுள்ளார் என்றாலும் alcohol அருந்தியிருந்ததாக FSL அறிக்கையில் தெரிவித்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் என் கணவருக்கு குடிக்கும் பழக்கம் இல்லை.

என் கணவர் electrician ஆக contract எடுத்து வேலை செய்து வந்தார். அதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் electrician முடித்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். மாதம் ரூ.40,000 வருமானம் வருவதை காட்டு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் பணம் கையில் தான் வாங்குவார்.

என் மாமியார் ஜெயலட்சுமிக்கு அவருடைய மச்சனர்கள் இருக்கிறார்கள். எனவே அவர்களை தரப்பினாராக தான் சேர்த்துள்ளோமே தவிர அவர் எங்களை நம்பி இருக்கவில்லை என்பது சரியல்ல, ஒரு வீட்டில் தான் இருக்கிறோம். அந்த வீடு மாமியார் பெயரில் உள்ளது. எனக்கும் பாகம் உண்டு.

என் மகளுக்கு வயது 16. எனக்கு ஒரே மகள் தான். நான் கேட்டுள்ள தொகை ரூ.99,00,000 அதிகம் என்றால் சரியல்ல. என் கணவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடந்து என்று சொன்னால் சரியல்ல. அவர் குடித்து நான் பார்த்ததில்லை. அவர் வருமானத்தில் தான் என் குடும்பம் நடந்துவந்தது.

இறுதி அறிக்கையில் "deceased had consumed ethyl alcohol at the time of death" என்று Ex.P2 ல் கண்டுள்ளது என்றால் சரிதான். எனவே அவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. யார் மீதும்

குற்ற பத்திரிக்கை இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. அவர் குடித்துவிட்டு வண்டி ஓட்டியதால் தான் இதுவரை குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 01.05 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.